Gr. 53655
2001
175
R. V. Rajappa

ஆதிமூலர் - திருவடிகளேசரண்.

வேலூர்.

# தனுக்கோடி முதலியார்

பேரில்.

# சாரப்பிரபந்தம்.

இஃது.

மொழுகமண்டி - கவிகஜாங்குசம்,

## தில்லைக்கோவிந்தப்புலவரியற்றி

பல்லாரி-

## கல்விச்சபையார்முன்

அரங்கேற்றியது-

பின்னர்,

ஷை - யூர் - தமிழ்க்கல்விச்சாலை.

## ஆதிமூலபிள்ளையவர்கள்.

கேட்டுக்கொண்டபடி.

சென்னபட்டணத்தில்.

சைதாபுரம்.

## உமாபதிமுதலியாரது.

கல்விக்களஞ்சியக்கூடத்து அச்சிலுற்பதிக்கப்பட்டது

சதுர்வேதசித்தாந்த - சபா - ௵ - ௰ - ல் - நிகழும்

---

சாதாரண - ௵ - வைகாசி௴ -

(பல்லாரி-கல்விச்சபையாரொப்பிதம். ஆசிரிய-விருத்தம்.)

வேலைசூழுலகின்மேலைவாழ்குமரன்.................. *
வேலனைநேர்தனுக்கோடி.................................. *
வேள்பெருஞ்சீர்த்திமணிவிளக்கென்ன.................. *
விளக்குமிச்சாரப்பிரபந்தம்.............................. *
சாலிவாகனசகாப்தமாயிரத்தேழ்.......................... *
சதவெழுபத்திரண்டினிற்செல்............................ *
சவுமியவருடங்கார்த்திகைசுத்த.......................... *
சத்தமிசௌமியதினத்தில்.................................. *
ஏலவார்குழலார் ச்சுறைதனமு............................ *
மிழையிடையெனவுமேமுழுதும் .......................... *
எதிர்செலும்புலவர்காண்பதற்கரிதா.................... *
யிலக்கணவருக்கெளிதியையும்............................ *
பாலதாந்தமிழையாயும்பல்லாரிப்........................ *
பதிகல்விச்சவையினருவப்ப.............................. *
பாவலன்தில்லைக்கோவிந்தனெவரும்.................... *
பரிந்திடவரங்கமேற்றினனே.............................. *

இஃது. ஷ-சபையாரி லொருவருமாகி-சஞ்சீவ கவி-என்றும். புணர்மொழிமரபுவிரித்துரையாசரியர்என்றும். விருத்த சரஸ்வதி என்றும் சிறப்புப் பெயர் வாய்ந்து

பல்லாரி-கலக்டர்-கச்சேரி திரான்ஸ்லேடருமாகிய

ஆ-முத்துசாமிமுதலியாரவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடில்-ஆசிரிய விருத்தங்கள்.

காஞ்சீபுரம் சிவஞானையர் பாடியது.

திருவெனவழங்குகையான்றனுக்கோடிமகிபன்மீது.... *
மருவுசெந்தமிழிற்சாரப்பிரபந்தம்வகுத்துவண்மைப் .. *
பருணிதராம்பல்லாரிப்பதிகல்விச்சபையார்முன்னர்.... *
தெருளரங்கேற்றல்செய்தான்தில்லைக்கோவிந்தன்மன்னே

வெங்குளூர் - வித்தியாவிலாசசபை
தமிழ்ப் புலமையோரா லியற்றியவை.
தஞ்சை-கவிநோட்டம்-வீரப்பிள்ளையவர்கள்.

புகலரிய தமிழ்க்கடல்வாழ்தில்லைக்கோவிந்தமுகில் புதி
யதேறன் முகைபவிழ்ந்துவார்ந்தொழுகுகுவளை நறுந்தெ
ரியல்புயமுயங்குமம்பொன், சகநகநேர் தனுக்கோடிமீச்
சொரிசாரற்பிரபந்தவாரிசார்ந்து, பகவனவன் சிறுவர்ம
தனரிபிரமர் புலவரெனப்படிந்திட்டாரே...............*

பொன்னூர்-மதுரகவி.
தருமலிங்கமுதலியாரவர்கள்.

நாவலர்கள்புகழ்தில்லைக்கோவிந்தக் கவிராயன் னறுந்
தார்வேய்ந்த, காவலனூர்தனுக்கோடிமீதிலசசாரற்பிரபந்
தங்காட்டுந்தேன்போல், தேவர்தமக்கஞ்ஞான்றென்றெ
ய்திபதேற்கைமலையைத்திரியப்பூட்டிப், பூவைவண்ணனுறை
திருப்பாற்புணரிமதித்துழன்றெழிலிற்போய்ப்புகாரோ...*

புதுவை-இராமசாமியுபாத்தியாயரவர்கள்.

நகத்தொடிரணியற்கீன்றத்தனுக்கோடிச் சிங்கல்மேன
ல்லோவொல்லா, மிகத்திலயபுகழுந்தில்லைக்கோவிந்தனியற்
றியசாரற்பிரபந்தம், சகத்தினின்முத்தமிழ்விளங்கச் சாற்
றிமல்பத்திலருந்தவங்களாற்று, மகத்தியனாகத்தியம்போ
லகத்தியமியாவையுநிகழ்த்தவலமந்ததம்மா...........*

சதுர்வேதசித்தாந்தசபைபள்ளிக்கூடத்துத்தலைமை
ஆறுமுகத்துவுபாத்தியாயரவர்கள்.

பாமழையாய்ப்பொழிதில்லைக்கோவிந்தப் பாவலனிப்
பரவைசூழ்ந்த, பூமிபுகழ் தனுக்கோடிப் புரவலன்மேற்
சாரற்பிரபந்தம்புத்த, தாமரைநாபன்பலிபாற் றூன்கொ
ண்டதானமும்போற்றுமாதந்த, வாமனமால்வளர்ந் தெ
னவும்வாழுலகெலாந்தழுவவளர்ந்திட்டானே..........*

வேலூர்-ஆறுமுகக் கவிராயரவர்கள்.

மணங்கமழ்தார் துயல்வருதோட்டனுக்கோடியெனு நா
மவள்ளன்மீது, குணங்கமழ்பூந்தமிழ்த்தில்லைக் கோவிந்
தக்கவிச்சிங்கங்கூறுமுந்நூற், பணங்கமழாடரவல்குற்பா
வையர்மால்லைபறுத்துப்பாசம்வீழ்த்த, வணங்கமழ்வா
ளதங்கோட்டுவரமுனிநோக்குறிலவனுமகிழுமன்றே...*

புதுவை-செந்தமிழ்.

இராசகோபால முதலியாரவர்கள்.

கச்சாருமலைமுலைவேல்விழியிழைநேரிடைமதுரங்காலு
ங்கன்ன, லக்காரமொழியார்சேர்மதுசகனேர்தனுக்கோடி
யாயவிறன்னை, மட்டாருநறுங் குவளைமாலையணி தில்லை
க்கோவிந்தஸ்வாழ்த்து, மிப்பாவுக் கெப்பாவு மொப்பா
காதெனவெவருமியம்பலாமே......................*

உறையூர்-முத்துவீர வுபாத்தியாயரவர்கள்.

நேரிசை-யாசிரிப்பா.

நனையவிழ்ந்தொழுகுதேனறுமலர்ச்சந்தம் ........*
புனைசெறியடவிப் பொதிகையிலமர்ந்த...............*
குறுமுனிவிளக்குங் கோதறுமுத்தமி..................*
ழறிவ னூல்வகைமுன் றறிந் துணர் கேண்மையன்......*
தேசுயர் தில்லைக் கோவிந்த னென்னப்..............*
பேசு மியற்பெயர் பிறங்கிய புலவன்..................*
வன்மைசானுற் பொருண் மன்னிய வாரண ..............*
நன்னெறி நோன்பினர் நவில்வே தாங்க...............*
மாதீ ரொன்பா னுய புராணந் .........................*
தேமறப் பெட்டுத் திண்கலை தெளிந்தே...............*
புலவுநா றடல்வேற் புரவலர் பெருமா.................*
ணிலகுமெண் ணிலவெறி யிருங்குடை நிழற்றி..........*
பகில மெலாஞ்சக மமைத்தவன் மைந்தன்...............*

திகிரியொன் றுருட்டுசேந் திரன்பகை யரசர் ............ *
மணிமுடி யுரிஞ்சு மலர்ச்சர ணத்தன் ............ *
குனிசிலை தாங்குங் கோகன கக்கரன் ............ *
திதலைவார் முலைசெம் பஞ்சடி யமுத ............ *
மதுரமிக் கிரதம் வாய்ந்தமென் மொழியர் ............ *
மன்மதன் மயிட மாநகர் புரப்போன் ............ *
கன்மலை மலைப்பக் கதிர்விடு தோளான் ............ *
அந்தண ருள்ளத் தவாக்கெட வேண்டிச் ............ *
சந்திர மழைபொழி தகைமைசான் முகில்புவி ............ *
நாயகன் கிருட்டின நராதிப னவையிற் ............ *
சேயெனப் பொலிந்து செந்தமி ழுணாத்து ............ *
வார்குழை வாம்பரி மாமணி யணிகள் ............ *
ஈரணுங் கடகமுஞ் செம்பொனம் பரமுங் ............ *
சுவிகையும் பெற்றே கவிகஜாங் குசமெனத் ............ *
தவலரு மொருபெயர் சார்நச் சிறந்தபின் ............ *
இப்புவி யதனி லிசைபெறு வோரி ............ *
லற்புத னெவனென வாய்ந்துளந் தேர்ந்து ............ *
வரநதிகுலத்து வந்துதித் தெவரு ............ *
முனாதரும் புகழ்மை யோங்கிய சீமான் ............ *
பணங்கம ழல்குற் பைந்தொடி முன்கை ............ *
உணங்கம ழிலவ மலரிதழ் மடவார் ............ *
விரும்பெழிற் பூமன் வேந்தர்க் கிளையான் ............ *
அரும்பிய குவளை மாலிகா பரணன் ............ *
தெவ்வரு ணயின்று தெவிட்டிவெவ் வினையைக் ............ *
கவ்விய வடிவேற் காளைநேர் வள்ளல் ............ *
நுணுக்கோ டிமீது சாரத் பிரபந்த ............ *
மெனக்கோ டிநற் பனை யிலகக் ............ *
கலிவெண் பாவிற் கட்டுரைத் தனனே ............ *

## ஆரணி. முத்தமிழ்-குமாரசாமிமுதலியாரியற்றிய அகவற்பா.

பூவுலகதனிற்புகழ்பெறவோங்கும் ................ *
மாவளஞ்சிறந்தவல்லாரிமாநகரில் ................ *
காவலனென்னக்களிப்புறவாழ்வோன் ................ *
பூவசியன்னெனுர்பூமிபாலகனும் ................ *
ஈரொடுத்தோதுஞ்செழும்புலவோர்க்கு ................ *
காரெனக்கொடுக்குங்காராளர்திலகன் ................ *
தார்வளர்மார்பன்தனுக்கோடிமான்மேல் ................ *
பேர்வளர்சாரற்பிரபந்தமென்ன ................ *
அந்தரியரன்விநாயகன்வேன்முருகன் ................ *
வந்தரிபயன்மதன்மருவுஞ்சரிதையை ................ *
நிந்தாத்துதியாய்நிகழ்கலிவெண்பாப் ................ *
பந்தஞ்சிதையாப்பாடல்பண்புறவே ................ *
செம்மொழிசிலேடைதிருகலும்யமகமும் ................ *
பன்மொழிமாற்றும்படித்தவரின்புற் ................ *
றம்மவோவென்னவருந்தமிழாலே ................ *
நன்மையாய்நவின்றனன் ................ *
புவிதனிலோங்கும்புலவருண்மகிழ்ந்து ................ *
கவிகசாங்குசமெனக்கனப்பெயர்தரித்த ................ *
தில்லைக்கோவிந்தன்றிருவடிபரவும் ................ *
தில்லைக்கோவிந்தச்செழுநாவலனே ................ *

## பெங்களூர்-பாலசரஸ்வதி-முத்துகுமாரப்பமுதலியார் இயற்றிய-தாழிசை.

கங்கைதங்குகுரு துங்கன்வஞ் சகர்மடர்கசடர் மார்பி
லிறையாளிநேர்-கன்னனனைதனுக்கோடிபாலின் மிசை வாழ
னுசெந்தமிழ்மழையாடவே ................ *

பொங்கிவந்ததனில் விகடமோதியிடு புலவரியானைக
ளினங்குசம்-புனிதமேவுந்தில்லைக்கோவிந்தக்கவிஞன்புது
மைமேவுமிந்நூற்புகலுமுன்........................... *
திங்கள்சூடுமரன்கும்பமாமுனியைத்திழநிந்தாத்து
திநீசெப்பெனச்-சிந்தைதன்னின்மிக நொந்தலைந்தவனு
ஞ் சித்தம்வேறுபடநிற்றலால்...........................*
சங்கரனுளம் வெகுண்டுதென் மலையிற்றங்க வேணு
மெனவங்ஙனே-தன்னையேற்றவ்விடின்னமந்நிலையிற் றண்
மையோடுறைவதுண்மையே ...........................*

பெங்குளூர்-கவிகஜ கண்டீர வச்சரபம்.

வரதராசமுதலியாரியற்றிய-ஆசிரியவிருத்தம்

திருவளர்ந்திடு மனுக்கோடிவேள்புகழினைத்திருப்புகவிலா
சமென்னத், தில்லைக்கோவிந்தகவிசொல்லலாலயமகமுஞ்
சிலேடையொடுநிந்தாத்துதி, உருவளர்ந்திடுமூலக மூண்டு
மிழுமொருவன்மாவும்பர்கோனம்பரத்தில், உதயவற்கூய
ணிமையிதயங்களிப்பநீயோதியுணர்நீயாகலின், தருவளர்
ந்திடுமைவைச்சுரர்கண்முன்னவைசொலத்தக்கதென மிக்க
வருளத், தபன்னு மனதினிற்கருதியீதரிதெனத் தனதுளம
ருண்டிணைசெய,மருவளர்ந்திடு துளவரிவெகுண்டோச்சலா
ல்வளநழைவுலகுமணுகான், வைகலுக்ககன்மிசைசூழ்ந்த
லைந்திடுமதை வையகமெலாமறியுமே .................. *

பெங்குளூர் முத்தமிழ்க்கடல்-நாற்கவிப்பெருவாரிதி.

சோமசுந்தரபிள்ளை-இயற்றிய. கட்டளைக்கலிப்பா.

நல்லைக்கோவிந்தமாரன்றனுக்கோடிநாயகன்மிசைசார
ற்பிரபந்தம், தில்லைக்கோவிந்தநாவலனன்பொடு செப்பு
பாடற்றிறத்தினைபாயவே, முல்லைக்கோவிந்தன்பேரன்பு
ணர்ந்துநான்முற்று மோர்ந்தருணிவருந்தேவரச், சொல்
லைக்கோவிந்தமாதலமீமிசைசொற்றமாநெடுமாலெனதானதே,முற்றும்

உ

ஆதிமூலர் திருவடிகளேசரண்.

# தனுக்கோடி முதலியார்பேரில்.

## சாரற்பிரபந்தம்.

காப்பு.

நேரிசைவெண்பா.

சீரோங்கு கீர்த்தி செறிந்ததனுக் கோடிவள்ளல். *
பேரோங்கு சாரற் பிரபந்தம்-பாரோங்க........ *
திங்களணி சங்கரன்செம் பங்கிலுறை யுங்கிரிசை. *
கங்கைமக னைங்கரன்றாள் காப்பு................ *

கலி-வெண்பா.

காராரு மேனிக் கதிராழி பைம்படையோன்......... *
சீராரு மாரந் திகழ்மார்பன் ஏரார்ந்த...............(௧)

நங்கையாங் காமாக்ஷித் தாயானை வாழ்த்திமனப்.... *
பங்கயத்தி லேற்றிப் பணிவோனே-கொங்கவிழுந்.(௨)

சீர்பூத்த செங்கமலச் சேயிழையால் செல்வமிக்க... *
தார்பூத்த செங்குவளைத் தாமனே-நேர்பூத்த......(௩)

மாதவர்கள் வாழ்த்துகின்ற மாநிதியே நீதிநெறி...... *
யோது மவர்க்குதவு முத்தமனே சீதமதி............(௪)

பக்காரும் பூண்டுநட மாடுஞ் சிவன்றன்னை .......... *
யெக்காலும் போற்றுமன்பர்க் கிஷ்டனே-இக்குவலை(௫)

பத்தி விசைவளர்க்கு மாரமுதே வந்தடைந்தோர் ... *
சத்ர பதியே தயாநிதியே-முத்தமிழ்ச்சொல்.........(௬)

பாவாண ருள்ளம் பரிவுறவைங் கற்பகப்போ........*
லோவாது செம்பொ னுதவுவாய் பூவுலகோர்...... (எ)

சிந்தா மணியே செறிந்த துயரகடந்து ............*
வந்தோ ரிடர்நீக்கும் வள்ளலே-பைந்தொடியா ...(அ)

ராசைகொள்ளு மார வழகா தமிழறிந்த...............*
போசனே யோங்கு புகழோனே-யாசகர்கள்.......(கூ)

போற்றவருள் கன்னனிகர் பூபா தனுக்கோடி.........*
யார்த்தமுகில் யோனுத்வு மத்தமனை-தீர்த்தங்க...... ய)

ளாமெவைக்கு மேலாகு மென்னுந் தனுக்கோடி.....*
யாமெனவும் யாவரையு மாதரிப்பாய்-பூமிசைபோல் *

பெயித்தாலும் பொய்யாப் புகழால் தனுக்கோடிச்...*
சத்தியந் தப்பாத் தருமனேர்-மித்ரா ............ (யஉ)

தனுக்கோடி யிந்திரவுந் தச்சமுகந் தென்............*
மனுக்கோடி யென்றல்வர லாறு தனைக்கேட்டி... (யங)

பாவலனே யாகிப் பனைத் துதித்துடொரு............*
ஞாவல் தணியா தலக்கனுற்ற-தேவதங்கள்.......(யச)

கண்டு தரிசித் துக் கலிவிடாய் தீர்கவென்று............*
கொண்டு வங்க ளாருகோர் கோசவழி-சென்றுநறும் *

வாசமலர்ச் சோலைதொறும் வண்பணில மூர்ந்துவளர் *
பாசி படராப் பசுந்தடஞ்சேர் தேசா............ (யரு)

நாகு தொனுநகரி லாண்டவ னுகும்.....................*
பூரசியன்றன் சந்நிதியைப் பார்த்து-உனைமிகுத்த (யஎ)

எம்பெருமா னென்னத்த னென்னாத னென்னைய ...*
னம்பரம னம்பகவ ஞான்மறையோன்-அம்புவியார் மூ

கொன்றையு மம்புலியைக் கூடணைந் தோன்பெரியோ*
னென்றுமழி யாதமுத லேறூர்ந்தோன்-மன்றல்குழ *

லைய மருங்கு லரிவை பொருட்டாகச் .... .. ........ *
செய்ய கிழவுருவாத் தேடிவந்து-மையறுசீர்க்... (௨௰)

காளையாய்க் கண்டோர் களிக்கமக வாய்ப்பின்னர்..... *
களையேற் றோன்றுங் கருணையோன்-பாளைவிரி .. (௨௧)

சோலை திகர்சடையான் சோமேசன் பக்கலிடப்......*
பாலுறை ந் தேவியராம் பார்வதியாள்-வாலையெனும்*

எந்தா யறம்வளர்க்கு மிலயத்தாள் மாசறுசீர் ........ *
நந்தாத தீபு நறுஞ்ஜோதி-செந்தா... .. .....(௨௩)

மரைமுகத்தாள் வாணுதலாள் மாமறைபா ளோதற். *
கரியாள் திருவுருவ மானாள்-கரியோன்பின்......(௨௪)

வந்த திரிசூலி வாராகி மாதங்கி ...................*
கந்தன் றனைப்பயந்த கல்யாணி-கொந்துமலர்ச் (௨௫)

சூடுங் குழலி துடியிடையாள் செங்கரத்திற்...........*
பாடும் பனுவற் பசுங்கிளியாள்-நீங் ..............(௨௬)

கயல்விழியாள் மாமணியாள் காமாக்ஷி யன்னை .......*
வயினடைந்தேன் மாமலர்த்தாள் வாழ்த்தி-செயிர்தீர *

வீழ்ந்தெழுந்து சென்னி மிசைக்கை குவித்துநின்று *
வாழ்த்தே னெனவழுத்தி வாயாரச்-சூழ்ந்து...,.. (௨௮)

குழவி யடியேன் குவலயத்திற் றோன்றி.................*
பழவினையா னல்குற்றேன் பார்த்தே-யழைத்துக். (௨௯)

கொடுப்பா ரிலாமற் குடும்பத் துடன்யா ... .........*
னடித்தகாற் றிற்சரு காகி யடுத்தநீத்துக்.......... (௩௰)

காசொன்று மீயானைக் கன்னனென்றும் வாணருக்குத்*
தூசொன்று மீயானைச் சோமனென்றும்-தேசொன்று.*

மில்லானை மாரனென்றும் ஏர்க்கநிச மில்லானைச் ....*
சொல்லா வரிச்சந்த்ர் தூயனென்றும்-பொல்லா.. (௩௨)

வுழுத்தர்கடம் மேற்பாடி யோர்பலனில் லாம.. .. ..*
லழுத்தழுத்தே வாடி யலைந்து-நிலைத்தகவி .. ... (௩௩)

சொல்வினைக் காற்றிற் றூற்றுபொருட் போற்றூற்றி*
யல்லிழந்த சந்திரனைப் போலழுங்கிப்-பல்கலைகள். (௩௪)

கல்லானே யாமாகிற் கைப்பொருளொன் றுண்டானு.*
லெல்லாரும் வந்தங் கெதிர்கொள்வார்-இல்லானை. (௩௫)

யில்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்ததாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்லென்று-நல்லமொழி (௩௬

யௌவையார் நீதி யருள்வசன மாச்செனவே.........*
செவ்வையா யோர்ந்துந் திரும்பவும்-வவ்விடராம். (௩௭)

பாத்ரமறி யாதசில பாவிகள்பாற் சென்றுமிகு.......*
தோத்திரங்கள் செய்து துதித்தவர்மேல்-நேர்த்தியாய்*

வெண்பாவைப் பாடில்பளா வெண்பார் வியந்ததற்குக்*
கண்பார்த் துதவிசெய்வார் காணேனே-பண்பாக்..(௩௯)

கலித்துறையைப் பாடில் கலித்துறைப்பா ரல்லால்-... *
கலித்தேற்குத் தந்தளிப்பார் காணேன்-வலித்து (௪௰)

விருத்தமதைப் பாடில் விருத்தவுணாயல்லால்... .... *
கருத்துவைத்துக் கேழ்ப்பவனைக் காணேன்-திருத்தமாத்

தாழிசையைப் பாடிலவர் தாழிசையே யல்லாது...... *
வாழிசையைப் பெற்றவரும் வாழாரோ-ஏழிசையிற் (௪௨)

சந்தமே பாடிலவர் சந்தமே யல்லாமல்............ *
சிந்தை யுறுகவலை தீராரோ-பந்தப்............(௪௩)

பரணியே பாடில் பரணிதா வென்பார்........... *
கருணையுட னாதரிப்பார் காணேன்-தருணப்... ...(௪௪)

பதங்களைத்தான் பாடில் பதம்பார்ப்பா ரல்லா.... ... *
திதம்பெறச்செய் வாரு மிலையே-விதவிதமாய்... (௪௫)

வண்ணமே பாடிலவர் வண்ணமே யல்லாம... .. ...*
லெண்ணுவார் தாமொருவ ரில்லையே-நண்ணியோ (௪௬)

டுண்ணு ஞெளிநிரு ஞைந்து புகழ்செய்யான்........*
றுன்னருங் கேளிர் துயர்களையான்-கொன்னே...(௪௭)

வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ.... .... *
இழந்தானென் றெண்ணப் படுமால்-வழங்கியவன் (௪௮)

றுய்த்துங் கழியான் றறவோக் கொள் நீகலான் ...*
வைத்துக் கழியு மடவோனை-வைத்த...... ......(௪௯)

பொருளு மவனை நகுமே-யுலகத்............ *
தருளு மவனை நகுமென்-றிருளறவே.. ..... ...(௫௰)

நாலடியிற் சொல்லுகின்ற நன்மொழியை-யானு .. *
மேலும்வகை பாரா ரிடும்பரவர்-வேலவிழிசேர்... (௫௧)

வேசையரைக் காணில் விவேக மருண் டுழன்றே .... .. *
யாசைகொண்டு சென்றங் கவர்வீட்டில்-பூசிதையாய்[(௫௨

வேண பொருள்கொடுத்து வேண்டும்-பணிமுடிப்பார். *
காணுவதே யின்பமெனக் காத்திருப்பார்-நாணமிலார் *

என்னென்ன வேணுமென்பா ரேந்திக்கொண்-டேதிரிவார்
சொன்னசொன்ன வூழியமுஞ் சோராமன் முன்முடிப்பார்

கொண்டுவந்து தேடிக் கொடுத்தபொரு-ளெல்லாமற் ....*
பண்டையோர்வைத்ததும்பாரா தளிப்பார் தொண்டைப்

போற்றிப் பணிசெய்வார் பூத்தாள்-பிடித்திடுவார்[போற்
வர்த்தபரி யாசத்திற் கின்புறுவார்-கோத்தபூ.... (௫௬)

மாலை தொடுப்பார் வழிபாடு செய்திடுவார்.........*
சேலை யுடுப்பார் தெளிவழிந்தோர்-சால.......... (௫௭)

விளக்கொளியும் வேசைய ர் நட்பு-மிரண்டுந்.........*
துளக்கற நாடின்வே றல்ல-விளக்கொளியும்.....(௫௮)

நெய்யற்ற கண்ணே யறுமே யவரன்புங் ..........*
கையற்ற கண்ணே யறுமென் றும்-வைபத்தில்....(௫௯)

அங்கண் விசும்பி னமரர் தொழப்படுவேந்........*
செங்கண்மா லாயினு மாகமற் றங்கைக் ........ (௬௰)

கொடுப்பதொன் றில்லாரைக் கொய்தளி ரன்னார் ..... *
விடுப்பர்தங் கையாற் றொழுதென்-றடுக்குடைய...(௬௧)

யன்னீறி நாலடியும் பாரார் பரத்தைசொல்லு...... *
மன்னீறி கொள்வா ரறிவிலா-மென்னென்னுந்.... (௬௨)

தாசிகளுக்கே யளிக்குஞ் சண்டாளர் செந்தமிழ்க்குக் *
காசுகொடுப் பாரா கழிமடையர்-பேசு....... ... (௬௩)

மருமைக் கவிகளை யன்புடனே பேணார்................ *
பெருமையிறு மாப்பிற் பிசகார்-திருவேயுன் ..,.. (௬௪)

பொற்பதத்தைப் பாடியான் புசித்திடாமலின்னு... *
மற்பர்களைப் பாடி யலையவோ-கற்பகமே........ (௬௫)

தீமைய கதியினிநா னின்னையடுத் தேன்புவிக்கோர் .... *
தாயேநாப் பாயெனவே சாற்றினேன்-நாயகியுங்.. (௬௬)

கண்ணு மெனைநோக்கிக் காசிலிபின் மேன்மைபெற்ற-. *
பண்ணூர்ந்த பாவாணு பார்தன்னின்-னண்ணுமுன்ற (௬௭)

ஞாமோது பேமொதுவிங் குற்றவகை தானேது... ....... *
தாராள மாமெலக்குச் சாற்றென்றாள்-சீரார்..... (௬௮)

மொழுசமண்டி நூமொன்றன் முன்மேரிருந்தார் ...... *
தழு புகழ் சென்னைபுரி சார்ந்து-பழுதில்லா .... (௬௯)

மூலைக்கோ விந்தன்மந்த்ர முன்னுதமிழ் வாசித்தேன்•
நல்லைக்கோவிந்தனென் பேர்செப்டக்கேள்-முலைமசறி.

ஆறுக்காட் டுக்குவடக் காமிரா ணிப்பேட்டை ..... ... *
வீறுடன்சென் றேறுங்கோர் வீரியனுந்-தேறுகல்வி ௭௧)

மூத்துகிஷ்ணன் றன்சபையில் முந்துகவி வாணனென *
வைத்திருந்தான் டானு மகிழ்வாயந்-குற்று ....... (௭௨)

சிலநா ளிருந்தபின்னர் தேவிநீ வாழு.............. *
மலரூர்வந் துன்மலர்த்தா ளண்டி-நிலைப்பளவில்.. (௭௩)

பாவலரோ நீர்நமது பக்க லிருமெனவே............. *
யாவலொடு சேஷா சலவள்ளல்-சீவனத்துக்... ..(௭௪)

குந்தமக்கோர் பத்துப்பொன் னும்மகற்குப் பத்துப்
பிந்தப் படியாக வெந்நாளும்-தந்தசொல்.... [பொன்.

மாறும லேநடக்க வைக்கின்றே னென்றனனத்........*
தாராள மாயெனக்குத் தந்தானே-ஆறுத......;(௭௬)

வாசைமண்டி யன்பினைக்கண் டாங்கவன் றன்வசித்தும்*
வாசலண்டி யானுமகிழ் வாயிருப்ப நேசமதாய்க் (௭௭)

காவியமும் பாரதமுங் கம்பரா மாயணமு ........... *
மேவுகவி வாணர் விடுகவியும்-காவலனாப்........-(௭௮)

பாவாண ரங்கங்கு பாடும் பழமொழியாந் ............ *
தாவிலிய லோடிசை தானுமே-நாவா.............. (௭௯)

லனுதின முஞ்சொல்லென் றன்புடன் கேழ்ப்பா ....... *
னினிதினி தென் பானின் புறுவான் தனதனவன்.. (௮௰)

இந்நாட்டி லென்னை யிருத்தித் தருச்செறிந்த ........*
பொன்னுட்டுப் பாவாணர் பாற்போந்தான்-மன்னுட்டுங்.

கேமல்சுப்ப ராயனெனுங் கீர்த்திமான் வந்தபின்ன ..*
ராமவனென் மீதி லருள்புரிந்தான்-தான்மகிழ்ந்து (௮௨)

பாடங்கள் கேட்டான் படித்தா னிலக்கணமும் .......*
நாடெங்கும் போற்றநனி நல்குபொருள்-தேடிக். (௮௩)

கொடுத்தா னனேகங் குவலயத்திற் கீர்த்தி........... *
யெடுத்தான்மேன் மேலுமெய்ப் போதும்-அடுத்தவருள் *
வேதியர்க டங்களிலே மிக்க குணமுயர்ந்த....... .. *
நாதன் றமிழுணர்ந்த நாயகன்-மேதினியில் ...... (௮௫)

பாங்காம் புலவர்பக்கல் பண்பு-மிகும்பார்சி............ *
வேங்கட ராயனெனும் வீரியன்ற-னோங்கிடுநாள் (௮௬)

காணும்போ தெல்லாங் களிப்பான் விருந்திடுவான் ... *
வேணும்போ தெல்லா மிகவளிப்பான்-கோணு ... (௮௭)

மனத்தா னவன்மீது வஞ்சகர்செய்-தீங்கை............. *
நினைத்தான் விழிசெவந்தா னேரார்-புனைத்தேனுர் (௮௮)

தார்வாடப் போராடி தன்செயத்தை நாட்டிப்பின் ... *
தார்வாடிச் சென்றங்கே தங்கினன்-தீராத.......... (௮௯)

ஆவன் மிகுந்துந்த வங்கிருந்தும் பொங்குகனைக்...... *
காவிரிநீ ராடிக் கரையேறி-தேவர்செறி ............... (௯0)

சீரங்க நாதர் திருவடியைச் சேவித்து ..................... *
பாரோங்கு மைசூர்ப் பதியணுகி-பேர்படைத்த.... (௯௧)

கோவிரா மஸ்வாமிக் கொற்றவனை வாழ்த்திபவன் ...... *
பாவிருந் தோர்கவிதை பாடினேன்-லாலித் ...... (௯௨)

தொருசோடு சாலுவையு மோர்நூறு ரூபாய் ......... *
பரிசீந்தான் யான்மகிழ்ந்தே பாங்காம் புரிசைசூழ் (௯௩)

அந்தமை சூரிலர சாளுமிந்த பூலோக.................... *
விந்திரனைக் காண்பமெனவெண்ணினேன்-வித்தையுள்ள

வுட்பரிகை மூன்முகப்பு மோங்கு மணிமாட......... *
மெய்ப்புவனத் துக்கு மெழிலுளதாம்-செப்பரிய...(௧௫)

அம்பா விலாசத் தருகணைந் துட்புகுந்தேன்...........*
செம்பவளத் தூணிறுவிச் சித்ரமணிப் டைம்பொற்(௧௬)

றாட்டடுக்கு வேய்ந்த சபாமண் டபத்தில்.........*
தொகுத்தமணி யாசனத்திற் றோன்றி-செகத்திலுள்ள..*

வேதபா ராயணர்கள் மிக்ககவி-ராசர்நெறி...........*
யோதுகின்ற மந்திரிய ருத்தமர்கள்-போதமன்னர்(௧௮)

சூழக் கொலுவிருந்தான் துங்கவ மராபதியில்........ *
வாழுமந்த விந்திரல்போல் மாவீரன்-ஏழுலகும் (௧௯)

வாழ்த்தும் பெருமான் மகிப னனைவரும் ...... *
போற்று மரசனுடர் பூபாலன்-பார்த்திபன் ........(௨௰)

காமரா சன்றனையுங் கந்தனையுங் கன்னனைநேர்......*
சாமரா சாவுடையர் தந்தமைந்தன்-ஞுடவேல்.....(௨௰௧)

கிஷ்ணரா சாவுடையர் கேழ்க்கக் கவிசொல்னே ......*
விஷ்டமுடன் கேட்டா ரிதைக்-ண்ட-துஷ்டன் ...(௨௰௨)

துவளாவேங்க டாசாரி சோர்விலென்றன் வாக்கைத்...*
தவறுகொங்கு வாக்கெனக்கொள்சாற்றி-சவைதனிலத்(௨௰௩

தியாகா திபனெனக்குச் செய்யுமரி யாதைதடுத்......*
தாகா வெனவுனாத்தா னங்கதற்குப்-பாகமா.. ...(௨௰௪)

யட்போதோர் பாட லதனிற்கொட் டாய்ப்பந்த .. *
லுட்போனைஷ டாலெ னும்போர் தார்கவியுஞ் செப்பினேன்

நஞ்சுண்ட வீசனுக்கோர் நற்கவிதை சொல்லென்று . *
ரொஞ்சா திரண்டுகவி யானுரைப்ப-அஞ்சாக்... .. (௱௬)

கவிகுஞ்ச ராங்குசம்நீர் காணுமென்று போற்றி ..... *
நவமாக வப்பெயரை நாட்டி-கவிராசர் ..... .. (௱எ)

மெச்சுங்கில் லத்திரெண்டு வேண வுதுப்பைகளு.. ..... *
முச்சிறப்பட் டுக்குடையு முண்மகிழ-விச்சையுடன் (௱அ

தங்கத்தோ டாவுஞ் சவரி யிணைபொன் றுந்.. ........ *
துங்க புரவித் துணையொன்றும்-பொங்கு....... (௱௯)

சரிகைக் கவசமுஞ் சந்த்ரகலை சோமன்.. ......... *
சரிகை துப்ட் டாபாகை தங்கச்-சரிகைபுட்டாச்... (௱௰)

சாலுவை ரெண்டுந் தயவாக வேயளித் ........,.... *
தேலு முகம னியம்பியபின்-வாலிபவென் .. .. (௱௰௧)

பைபலுக்குஞ் செய்வகையே பாங்காங்கில் லத்தளித்து*
கையி லிடச்செம்பொற் காப்பீந்தே மெய்விருது(௱௰௨

பில்லை யிரண்டணிந்த பேதாக் களையளித்து ... ..... *
செல்ல வழிவிட்டான் செகதீசன்-சொல்லியதோ(௱௰௩)

ரந்த நகர்விட் டருங்காசிக் கேகவென்று.............. *
வந்தேன் பெலகாமில் மானேஜ-ரிந்தக் ....... (௱௰௪)

குருநாத வள்ளல்தந்த கோமான் குணவான் ... ..... *
ருராச கோபால வள்ளல்-தருவேபோல்........ (௱௰௫)

தந்தான னேகங் கவிகுஞ்ச ராங்குசமே............ *
சிந்தைமகிழ்ந் தேகாசி செல்லுமென்றான்-அந்தமுள்ள.

நாகப்பூர்த் திக்குசென் றந் நாட்டில்விடா யாறிடவென் *
னாகப்பூர்த் திக்குமகிழ் வாயினேன் - ஓகையெல் லேனல்... *

மூத்துகிஷ்ண வேளென்றும் மூன்று ளெனைக்கவியாய் *
வைத்திருந்தமாலென்றும் வாழ்த்தியிதி லுய்த்துரைத்தே

னல்லோவந் நல்ல வறிவாள னாற்கவிக .............. *
ளொல்லோனைக் காக்கவென வீன்றளித்த - செல்வன் (௱௰௯)

மூகிலரங்க சாமியெழின் மோகமின்னார் காமி ........ *
நகிலரங்க மார்திமிர்ந்த நாணம் - வகிரிலுழையார்... (௱௨௰)

தாமணிந்த பேரணிக டந்தகுறி காட்டுமெனத் ..... *
தாம மணிந்த தடந்தோளான் - சோமன்ற ..... (௱௨௧)

னெண்ணிரண்டு தண்கலையு மேர்த்தபோ தொப்பாகும்
வண்ண முகத்தை மகிழ்ந்துகண்டேன் - அண்ணாநீ (௱௨௨)

ரெங்கிருந்து மிங்குவந்தி ரென்றான் பரிசுரைத்தேன் *
பொங்கினா னங்கம் புளகித்தான் - திங்கள்பதி .....(௱௨௩)

னாலுமட்டும் வைத்திருந்து நன்னாள்க ளாக்கித்ந்தை... *
போலு மதிலிரட்டி பூசித்தே - சாலவுவந்..... ..(௱௨௪)

தாயிர ரூபாய் கொடுத்தா னதைக்கொண்டு ........... *
போயினேன் கங்கைதனைப் பூசித்தே - நேயமுடன் (௱௨௫)

காசிக்கு வந்துவந்து காட்டென் - றுரை துறைகள் ... *
பேசுமறு பத்தாறும் பேர்ந்தாடிப் - பாசமுடன் (௱௨௬)

விஸ்வநா தன்றொடுவி சாலாக்ஷி யன்னையையு........ *
மக்ஷயனும் விந்துமா தையனையு நச்சியங்கு.... (௱௨௭)

சற்றுத் தலம்பணிந்து தொண்ணூறு நாளிருந்து......*
மற்றைத் தலமும் வணங்கியே -சற்றூர்........(௱௨௮)

திகையாம லங்கங்கு தீர்த்தங்க ளாடி ..................*
நகைநரும தைக்கரையை நண்ணி மகிழ்வாகத்...(௱௨௯)

தேவரா சப்பெருமான் சிங்கார மாவியற்றுங் ........ *
காவுகளுஞ் சத்திரமுங் கண்ணுற்று-பாவுறாத்தேன் ௱௩௰

தேவரா சப்பெருமாள் சித்தத்தா லன்றேனு.........*
மேவிலு னேபொன் னிருநூறு-ஆவலாய்...... ...(௱௩௧)

சிக்கந்த ராபாதில் செல்வப் பெருக்குள்ள... ....... ...*
வக்கந்த ளும்ராம சாமியன்பாய்-தக்க... ... ...(௱௩௨)

கொடையளித் தான்பெற்றுக் கொண்டங்கிருந்து......*
நடைவழி பெங்குளூர் நண்ணி யிட முற்றேன்......(௱௩௩)

புருவத்தி லென்னைவைத்து போஷித்த நேசருக்கு ... *
ளாருமிப்போ திங்கில்லை யாதலால் சேரவைத்த...(௱௩௪)

கையிலுள்ள தும்போய் கவளத்துக் குந்துணிக்கு......*
மெய்யி லணிபணிகள் விற்றுண்டே-னையோநான்(௱௩௫)

வாழு மனையடகு வைத்த கடன்ருபா...... ..............*
யேழுநூ றுக்குவக்கொன் றின்றியே தாழ்விலா (௱௩௬)

வல்லமையு நீங்கி மதியுங்-குலைந்து தமிக..................*
வல்லவடைந் தன்பதத்தை யண்டினேன்-சொல்லரிய *

தாயே யெனதுகலி தள்ளுதற்கென் னுலரிது.........*
நீயேகாத் தாளெல்றேன் னின்மலியும்-வாயார (௱௩௮)

மாமனித ரெல்லோரும் வாழ்த்துவார் போலென்னை ❋
காமியென்றும் வாமியென்றுங் கட்டுரைப்பர்-நாம (௱௩௯

மலையின் மகளென்றும் வன்னெஞ்சி யென்றுந்... ...❋
சிலைப்புருவ மென்றுஞ்சேட் டிப்பர்-கலைபாத ..... (௱௪௰)

மையிலருங் கண்ணேர் வருத்தவ் விணைச்சேலைத்......❋
தையலென் றேசித் தரங்குணப்பார்-வையகத்தில் (௱௪௧

மாட்டிடையன் றங்கை வம்பி துடியிடைச்சி... ... ...❋
யாட்டிடையன் பெண்டி ரருளில்லாள் வீட்டிணையும்௱௪௨

வெட்டவெளி யாக்கும் வெறிச்சியெங் கும்பாவி......❋
கட்டழிடா நீலி கடுநாரி-திட்டமிட்ட.............(௱௪௩)

ஆங்காரி உளங்காரி யார்க்கு மகங்காரி..................❋
யோங்காரி யென்றுமெனை யோதிடுவார்-பாங்கில் (௱௪௪)

மடைச்சி நரைச்சிபெடர் வாய்த்த பறைச்சி..........❋
கடைச்சி யிரூழ்கிடைச்சி காளை விடைச்சியென...(௱௪௫

வாழ்த்தெடுத்தே யம்மொழிபால் வைதிடுவா ரொந்தனிட-
பாழ்த்த பிழைப்பையெல்லாம் பார்த்தாயேதாழ்ச்சியாய்

என்று முலகுளோ ரேசுவபோ லேசாது...............❋
துன்றுபுகழ் வாணுநீ சொல்லக்கேள் மன்றற்......(௱௪௭)

பருட னொருவன்முன் போற்றும்வா ணர்க்காய்த்......❋
திருடனெனப் போரொடுத்துஞ் சென்றான்-பெரியா௱௪௮

புலியினுக்கும் பாம்பினுக்கும் பூமியிலே யாட்டை ... ❋
சலியா தெடுத்துசவை சார்ந்தான்-மெலியாம... (௱௪௯)

லோடெடுத்தா னையமெடுத் துண்டான் பதியிழந்தான் *
மாடெடுத்தா னூர்தோறும் வந்திருப்பான்-தேடிக் (௱௫௰)

கரித்தோலைப் போர்த்துமறைக் காட்டி லுறைவான்... *
திருத்தமா கக்காணான் றேடச்-சரித்திரத்தால் ... (௱௫௧)

ஆடவரொலா நகைக்க வாடினான் கூடினான்...... ...... *
வீடவரொ லாம்பேச வீங்கினான்-னாடி............(௱௫௨)

மருக னுருவிலியாய் வாழ வெரித்தான்... ... ......... *
கரிமுகனை யீன்றக் கரிக்குப்-பெரிதாம்...... ...(௱௫௩)

மகோதரத்தைத் தீரான்றன் வார்கழற்கால் வாத... ... *
மிகாநபடி யோர்மருந்தும் வேண்டான்-அகாத..(௱௫௪)

வயித்திய நாதனென்றே வையகத்தோர் சொல்லல்... *
பயித்தியமோ வன்றோ பகர்வாய்-வெயர்த்துடலம் (௱௫௫)

வாடி விறகெடுத்தான் வாணனுக்காய்ப் பாடினான்...... *
தேடி மிருவனையுந் தெட்டினான்-னாடருணைக்... (௱௫௬)

காணிக்கா வேறூற்றிக் காட்டினான் றென்மதுரா...... *
வாணிச்சி பிட்டுக்கா மண்சுமந்தான்-வீணே ... (௱௫௭)

பிரம்படி யும்பட்டான் பேயனை யைய............... *
வரம்பெடுக்க மண்ணெறித்தான் மாழ்கித் திறங்கொள் *

விசையன் றவநிலையில் மேவியோர்பன் றிக்கா...... ... *
வசையடைந்து வில்லான்மா றுண்டான்-இசைபோய் *

விருப்புடனே வேடனெச்சில் வேண்டியுண்டா னுண்டு *
செருப்படி பட்டானே சீசீ பரப்பி... ........ ...(௱௬௰)

அணியா பரண மணியக்கிட் டாமல்...... ...... ......*
பணிகள்தலை யென்பணியப் பார்த்தோம்-கணிசமிலாக் *

கொஞ்சஞ்சோ றுனுங் கொண்டுண்ண வில்லாம ... *
னஞ்சையே வாரியுண்டா னன்றாக பஞ்சைக் ... (௱௬௨)

கலையென்று சோமனிடை கட்டுதற்கில் லாமல்.........*
தலைபிலேலார் சோமன் றரித்தான்-பிலமாய் ......(௱௬௩)

பரித்தேர் கரிபரியோர் பல்லக்கில் லாம...... ... ......*
லெருத்தின்மே லேறித் திரிவான்-தரித்திரான் ... (௱௬௪)

ஆதலினா லெங்கணவ னாய்ந்த கவிப்புலவர்க்... .....*
கேதுதரப் போறான்னீ யின்னங்கே-ளோத:......(௱௬௫)

மலையினி லெலன் சக்களத்தி வந்திரா தன்னான்............*
றலைபிலே நித்தூண்டிச் சார்ந்தாள்-முலைபெருத்த(௱௬௬

சக்களத்தி யாற்குடும்பந் தாறுமா றச்சுதுகாண்...... *
மக்களிலே மூத்தபிள்ளை வாறுகேள்-தக்க........(௱௬)௭

சரிவேஷ மாகிநின்றுங் காட்டிற் குறத்தி................*
வெருவி முருகன்பால் மேவப்-புரிந்தானே......(௱௬௮)

தூங்கன் முகமாகி சோறு கிடையாம...................*
லேங்கி யிருந்தா னெவர்தரினும்-வாங்கியே.....(௱௬௯)

யுண்பா னொருகொம் பொடிந்தா னுலகுளோர் ...... *
கொண்டாடக் குட்டுண்டுக் கொண்டானே-பெண்டாய்க்

கலியாணஞ் செய்துகொளக் காசளவி லாமற் ........ *
சவியா திருந்துவிள்ளர் தானே-வலியனைப் ...... (௱௭௰)

பெண்டிர்கிடை யாமலந்தப் பேதைபனைப் போலிருந்த
வண்டிபெனும் வல்லணைபை வைத்திருப்பான்-கண்டபடி

வீதி குளக்கரையில் வீற்றிருப்பா னெப்போதுங் ... *
காதுமுகம் வாயுங் கரியானான்-ஓது .......... (௱௭௩)

மெழுதுதற்கு நல்ல வெழுத்தாணி யில்லான் .......... *
பழுதுபட்ட கொம்மைக்கைப் பற்றி-யழிவிலாப் (௱௭௪)

பாரதத்துக் கான பனையோலை யில்லாமல் ............ *
மேருவின்மே லேயெழுதி விட்டானே-சேரவென்றாற். *

கன்னியருக் கேயொரு காற்காசு மில்லாதா ......... *
னென்னதரப் போறான்கா ணின்றொருவன்-சொன்னபடி

கேளான் மலையெறிந்தான் கார்த்திகே யன்கடம்பன் ... *
வேளாஞ் சிலம்பனொரு வேலுடைய-வாளானான் (௱௭௭)

இன்னு மவன்செய வியம்பக்கே ளென்பிழைப்பை .... *
பென்னவென்று சொல்வே னெழில்வாணு-முன்னமே *

வாத்தியார் கேழ்க்க வழங்கமாட் டாதவன்று ....[ருந்த
மாற்றவன்போற் காற்றளையை மாட்டிவைத்தான்பார்த்தி

வப்ப னதைக்கேழ்க்க வந்தரங்கத் தோதியே ...... *
யிப்பதகப் பன்சாமி யென்றிருப்பான் வெப்புடைய .. *

பொல்லா வசுரர்தமைப் போக்கினு னென்றுமெய்ச்சி .. *
நல்லானையிந்த்ர னல்கியும் வில்வேட்டை ... (௱௮௧)

வேடர் வளர்த்தபெண்மேல் வேட்கையுற்றே யேய்ப்பிழ
காடதனிற் செல்லக் களிப்புற்றான்-வேடர்வரக் .. [ந்து

கண்டான் பயந்தானக் காட்டினிலே வேங்கைமரம்.....*
பண்டாங் கிருந்தாற்போற்பார்க்கநின் றான்உண்ணவெந்த

சோறு கிடையார்போற் சொக்கி மிகவிரும்பி............ *
காறு கிழவனெனக் காணவுரு-மாறுபட்டுத்.....(௱௮௪)

தேனுந் தினைமாவுந் தேங்குழலாய் தாவென்று........*
தானிரண்டு கையேந்தித் தாழ்ந்துநின்றான்-கானக் ௱௮௫

குறப்பெண்ணைக் கூடிக் குலத்தைக் கெடுத்தான்.. ...*
மறப்பெண்ணுங் காலம் வருமுன்-சிறுத்த.......(௱௮௬)

வொருமாங் கனிக்கா வுலகமெலாஞ் சுற்றி..........*
யருமாந் தனையாண்டி யாக்கிப்-பெருகப். ...(௱௮௭)

பொருட்டேடு முன்போற் புலவனே யானான்........*
தெருட்டேடான் செட்டியெனச் சென்றான்-மருட்டி.*

பரிய மலைக்கிழவ னாகிச் சிறந்த.................. ...*
பெரிய மலையனைத்தும் பெற்றான்-கார்வாழப்...(௱௮௯)

பெற்ற தகப்பன் பெரிய சடையாண்டி...............*
சிற்றாண்டிப் பிள்ளைகளைச் செப்பினேன்-மற்றுமினி. *

நானுமோ ராண்டிச்சி நம்பிவந்த வுன்றனக்குத்... ...... *
தானங் கொடுக்கவொன்று தானுமிலை-மானவனே(௱௯௧)

அண்ண னொருவ னவல்கதையைச் சொல்லவென்று...*
லெண்ணத் தொலையா தெனினுங்கேள்-நண்ணுபொருட்

டாகப் புவிமீ தனேக விதமாகத்...... .......... ....*
தேக மெடுத்தான் றெரியாதோ-சாகரத்தி .... (௱௯௩)

லோர்பெரிய மச்சமதா யோடியந்த சோமுகா ...... *
சூரனையி ருண்டு சுருதிதந்தான்-தாரா ........ (௱௯௪)

ரமரர் தருவாளொன் றுமையாய்க் குன்றின் .......... *
சுமையெடுத்தான் பாற்கடலிற் றோன்றி-இமைக்குங் கட்.

பொன்ன னுருமும் பொன்னென்றே பன்றியாய்க்... *
கொன்றா னவன்சுருட்டுக் குவ்விரித்தான்-மன்னி(௱௮௬)

யிரணியனைக் கொன்று விரணியமுன் டென்றே.... *
நரசிங்க மாகத்தா னண்ணி வரவுவந்தான் .... (௱௮௭)

எண்சா னுடம்பிருசா ணாகிபலி யைச்சிறிது ... ... .. *
மண்கேட்கப் போனானே மற்றதற்கு-வெண்புகரோன். *

றண்டித்துங் கேளாதான் றானா யளிப்பவந்த........ *
கிண்டிகையின் மூக்கடைப்பிக் கேசவனுங்-கண்டு(௱௮௯

தூரும்பினாற் குற்றவந்த சுக்கிரனோர் கண்ணின்........ *
றிறமிழந்தான் கேட்டாயோ செய்தி-திரம்பக் ... (௨௱)

கொடுப்பா ரருகிருந்து குற்றங்கள் சொல்லிக்........ *
கெடுப்பாரைத் தெய்வங் கெடுக்கும்-தடுக்கொணா-(௨௱௧)

தென்பதற்குச் சுக்கிரனா மீகைக்கு மாவலிநல்........ *
லன்பும் பெருஞ்சாக்ஷி யானதுபார்-இன்பமுட. (௨௱௨)

றாத்தமருக் கீந்த தொருசிறிதே யாயினுந்தான் ..... *
சத்தலோ கத்துயரஞ் சார்தல்போல்-வித்தகனம்(௨௱௩)

மண்பெற்ற வாற்றால் வளர்ந்தா னளர்ந்துகொண்டா... *
னெண்பெற்ற விந்திரருக் கேயீந்தான்-திண்ணப்(௨௱௪

பரசிராமன்னாகிப் பாராசை தன்னாற்............*
சிரசுகொண்டு வேந்தர்களை தீர்த்தே-யரசாளச்.. (௨௱௫)

சீராமனாகிவந்தான் சீதை தனைத்திருடிப்.......... *
போரோர்த்த ராவணனைப் போக்கினான்-பேரார் (௨௱௬)

பலராமனாகிப்பொன் பட்டணத்தைக் கல்வா ..... *
னிலகு கலப்பை யெடுத்தான்-குலவுமவன் ..... (௨௱௭)

றம்பி யெனவுந் தலையாயி லவதரித்து . ............ *
வம்பு புரிந்த வகையெல்லாஞ்-செம்பதுமத் ..... (௨௱௮)

தோனாலு மோரா யிரனாவ னாலுமெங் ......... .. *
கோனாலுங் கூறுதற்குக் கூடாவே-யானாலும்... (௨௱௯)

அன்னான் றிருட்டும் புரட்டு மறிந்தமட்டுஞ்... .... *
சொன்னாலுஞ் சொல்லத் தொலையுமோ-அந்நாளி(௨௱௰)

லோர்மனையி லேபிறந்தா னோர்மனையி லேநுழைந்தா *
னூர்மனையெலாம்வளர்ந்தா னுண்ணுமுலைப்-பீர்வழியாய்

பூதகி யைக்கொன்றான் புள்வா யினைக்கிழித்தான் ....*
[illegible]த முறச்சகட்டை யெற்றினான்-பேதமென்னு(௨௱௰௨)

தாயர்மனை தோறும்வெண்ணெ யள்ளியுண்டப்பெண்களி
வாயிற் றடவி மகிழுவித்தான்-சேய்போ .......... [ட.

லிடையரிட கன்னியனா யெத்தி மயக்கித் .. ......*
தடையிலா துந்தனந் தாவென்பான்-இடை நடுங்க(௨௱௰௪

வோடியந்த கோவியர்க ளாற்ற பரிசுணாப்ப ..... .*
வாடி யசோதை மனமெலிந்து தேடி ....... (௨௱௰௫)

புரவிற் பிணித்துபழந் தாம்பினா லோச்ச..............*
மருதமரம் வாணிலுற வைத்தான்-கரநீட்டிக் .. (௨௱௰௬)

கோணற்கூத் தாடிக் கொடாதா ரிடத்தவரோ ........ *
நாணமுறவெண்ணெய்க்கை நக்கினான்-வேணாதி (௨௱௰௭)

கன்றைபேய்த்தான்மாயங்காட்டும்விளவின்மேற்போய்க்
கன்றையெறிந் தவ்வசுரர் கன்றவே-வென்றான் (௨௱௰௮)

மடுவிற் குதித்து வலியகா ளிங்கன் ....................*
படமீ தறநடித்தான் பார்த்தாய்-தடங்கணாயி (௨௱௰௯)

நீராடும் பெண்கள்வைத்த நீள் துகிலைக் கொண்டவர்கள் *
போராடப் பூங்குருந்திற் போய்நின்றான்-காரோர்பூந் *

கூந்த லிடைச்சியர்கள் கூவி யிரந்திடலும் ..........*
வாய்ந்து கொடுக்காத வன்னெஞ்சன்-சாந்தமில்லான் *

முன்னே கரிபரித்து முத்தியளித் தவ்விலங்கைப்......*
பின்னே பரிகரித்தான் பித்தனன்றோ-அன்னான் (௨௨௨)

கருதுபணங் காசளித்துக் கல்யாணஞ் செய்யா ......*
தெருதேழைச் செற்றற் கிசைந்தான்-கருதலனா .. (௨௨௩)

மம்மானைக் கொன்றபினே ரம்மா னரசனருள் ... .. *
செம்மானைக் கைப்பிடித்துச் சென்றானேசும்மா (௨௨௪)

சிசுபாலன் மேற்கோவந் தீரா தவன்வாய் ........ .. *
வசையெண்ணி யாங்கவனை மாய்த்தான்-பசித்துவந்த *

குந்திமக்கள் கேழ்க்கிற் கொடுக்கத்தன் கைத்திருந்தாற்*
செந்தனித்து தாகத்தான் செல்வானே-அந்தமில்லான் *

அத்தி பரிசென் றாக்கொடியோன் முன்னேதன்.....*
வித்தைசில காட்ட விரும்பவவன்-வைத்த........(௨௨௭)

சரங்கத் தழுந்தாது தூயோர் துதிக்கக் .............. *
காந்ததன் பேருருவங் காட்ட-திரமறியான்.....(௨௨௮)

கரடமே யென்று கருதித் துரியோதன் ............*
பேர்நடத்தப் பேசியே போமெனலும்-பேரமரில்...*

குந்திமக்கட் காகவே கொன்றான் கவுரவரை .........*
வந்தபடை யெல்லா மடிவித்தான்-சொந்தமதாய்த்...*

தாரணியை யத்தை தனையர்க் களவளித்துத்.........*
தாரணியு மாமகுடந் தான்புனைந்தான்-றானென்றான் *

ஏழைக் குசேலன் றந் திட்டவவல் வாரியுண்டு ......... *
தோழனென்றெண் ணமைத் றரத்தினான்-வாழும்வட ...*

வேங்கடத்தி லோர்நிலையாய் நின்று விரும்புபணந் ..... *
தாங்களென்று தண்டித்துத் தண்டுவான்-ஆங்கடைந்து *

வந்தவர்கள் வித்தமெல்லாம் வாங்கிக்கொள் வானன்றி *
தந்தளிப்பா னல்லவிவன் றாரணியில் சொந்தமென ...*

நம்பினவர் தாமே நடுங்கி யழச்செய்தே...............*
யன்பில்லாத் துன்பத் தலக்கழிப்பான்-வம்புசெய்வான்*

மொட்டை யடித்தே முழுதும் பறித்திடுவான் ....... *
பட்டைநா மப்போட்டுப் பார்த்திடுவான்-இட்டமுடன்*

கோலுங் குடுவை கொடுப்பான் கரந்தனிலே........ *
யேலுங்கோ விந்தமிட விச்சிப்பான்-மேலுமே. (௨௨௯)

வாதிடுவா னூதிடுவான் வாங்குவான் றன்கொடான்... *
தாதனவ னென்பதுவுந் தப்பிலையே-ஈதலில்லான் (௨௩௮)

என்ன தருவா னிவன்பெண் டிலக்குமியு ........ *
மன்னவர்க்குத் தந்தவரில் வாழ்ந்திருப்பாள்-இன்னு ...*

மிருக்குமிட மீசென் றிவன்மார் பகத்திற் ......... *
பெருக்கமுடன் வீற்றிருக்கும் பேதை-உருக்கமில்லாத்.

தாதன்பெண் டாகியுமோர் தாதச்சி யாதலினு ..... *
லேதுதரு வாளிவ் வெழின்மினுக்குந்-தோதகர்க்குப் *

பிள்ளை யிருவருண்டு பிள்ளைகளி லேயொருவன்.......*
வள்ளலையான் சொல்லுகின்றேன் வானுகேள்-துள்ளிவளர்

சென்னி யிழந்தான் றிரிந்தான் மறையிழந்தா.......*
னன்னமே யாவலா யாகினு-னன்னதுவாய்ப்....(௨௪௩)

பொன்னின்முடி தன்னை நனி போயலைந் தங் காணும...*
லிந்நிலத்தில் வீடு மிழந்தானே-முன்னவொரு... (௨௪௪)

காணியும் பூமியில்லான் காதலித்த தன்மனையாம்... *
வாணியைத்தன் வாயில்வைத்தான் மற்றேறுனு-கோனுக்.

கரும்பையே வில்லாக்கிக் கட்டி வளைக்கச்... ... .....*
சுரும்பையே நாணாகத் தாக்கி-யரும்பையே.... (௨௪௬)

பாணமாக் கொண்டு பரமன்மேற் போரொடுப்பான் *
காணு மதியே கவிகையாக்-கோனுங்....... ...(௨௪௭)

கடலே செயமுரசாக் கன்னியர் கூட்டம்.... .........*
படையாப் பவுசு படைத்து-நடைமெதுவாந்...(௨௪௮)

தென்றலே தேராத் திரியுமீ னேகொடியாப்....... *
புன்றலைத் தத்தைப் புரவியாத்-துன்று .......... (உசகூ)

மிருளோர் கரியா வெளிதீதென் றெண்ணி ........ *
வருசற் கிளையந் துவலி காட்ட-தெருளெய்தி.....(உருய)

நெற்றிக்கண் ணுலந் நிமலன் விழித்திடலும்...........*
வெற்றியற்று நீறாகி விட்டான்பின்-சுற்றி...... (உருக)

யமரர் தொழலா லனங்கனு மென்ன ................ *
விமல னருள்சுரந்த மேலுஞ்-சமர்தொடங்கி .... (உருஉ)

வெம்பு மதப்பவிம் மேதினியோர் தம்மையே ...... *
வம்பாலே மாட்டி மயக்குவான்-வம்பிலே......(உருங)

காமங்கொண் டோர்பிறனிற் காமிகடன்கைப்பொருளும்
வாமவிலை மாதர்நச்சு வார்பொருளும் பூமிசுழல்(உருச)

காற்றிலே தூற்றிக் கமரிற் கவிழ்த்தாற்போல்.........*
மாற்றுவான் போற்றில் வழங்கானே-ஆற்றுமல் (உருரு)

வேண்டிவந்தோர் தங்களுக்கு வேணதீய மாட்டாத...*
வாண்டிகளுந்தாதருமேயாகினும்-வேண்டியவர்க்(உருசா

இப்பவகை யில்லா திருந்தாலு மீவானைப்.............*
பையநான் காட்டுவேன் பாவாணு-வையமிசை...(உருஎ)

கங்கை குலத் துதித்தோன் காதலிக்கும் வாணர்கலி.....*
பங்கப் படவழங்கும் பாக்கியவான்-பொங்குகட (உருஅ)

னஞ்சதஞ்செய் நம்பரம ணுண்மலர்ப் பாதங்கட்[மன்பா
டஞ்சமென்றே யெப்போதுஞ் சார்ந்தவன்காண்-விஞ்சு

லென்றன்பா தத்தினையு மென்றனைய போரிருவர் ...... *
தந்தம்பா தத்தினையுந் தான்றொழுது - தண்டுறைசேர் (௨௬௰

வல்லாரி மாநகரில் வாழ்வான் கிளைஞருட ............ *
னெல்லாரும் போற்று மெழிலாளன் - வில்லார் .. (௨௬௧)

தனுக்கோடி யென்னுஞ் சதிரனை நீ கண்டால் ... ..... *
மனுக்கோடி யேற்றவழங்கும் - இனிப்போதி ...... (௨௬௨)

யென்னவென்னை நின்னிடத்திற் கேகப் பணித்தபணி *
தன்னைசரண் மன்னுசென்னி தாங்கினேன் - அன்னையவள்

நன்றமைக நின்கரும மென்று நனி வாழ்த்தியினி ...... *
யொன்றுளது சொல்வனென் றோதுவாள் - நின்றனக்குத்

தன்சரிதந் தன்கணவன் றன்சரிதந் தன்மக்க ......... *
டஞ்சரிதந் தன்றமையன் றன்சரிதந் - தன்மருகர் (௨௬௫)

தஞ்சரித மெல்லாந் தவிராமற் சாற்றென்றாள் ......... *
அஞ்சேல்போய் வாவென் றருளினாள் - அஞ்சலித்தேன் - *

வாழ்ந்தேனெனத் துதித்தேன்வாழ்த்திமலர்த்தாளின்மிசை
வீழ்ந்தேனெழுந்தேன் விடைகொண்டேன்சூழ்ந் துசெறி

நன்னெறியி னற்சகுன நற்குறியுங் காணுதலுந் ...... *
தின்மையெலாந் தீருமெனத் தேறியே - மன்னி (௨௬௮)

வருகையிலென் கண்ணெதிரோ வந்தான் சிறந்த ...... *
புரவியின் மீதோர் புலவன் - பெரிய .......... (௨௬௯)

கடுக்கன் சரப்பணியுங் கையிலிரு தோடா .......... *
முடுக்கினேன் முன்வரலு முன்னித் - தடுத்திருந்த .. (௨௭௰)

பொங்கமுடன் வந்தீர் புலவரோ போலுநீ...............*
ரெங்குபோய் வாரீ ரியம்புமெனத் - துங்ககவி.....(௨௭௧)

வாண னுரைத்ததையும் வாழ்த்திப் புகழ்ந்ததையும்.... *
நான்வகுத்திப் போது நவிலுவேன் - தானுவெனும்....*

அத்த னமல னருணேசன் பாகமுறை..............*
பத்தினியாள் பொற்பாதம் பத்திபாய் - சுத்தியாய்.(௨௭௩)

போற்றிப் பணிந்துநிதம் பூசித்து வாழ்ந்திருப்போன்.*
சாற்றரிய வாயின்முன்னோர் சந்நிதியில் - வீற்றிருக்கும்.*

வாசமலர் வேன்முருகன் வள்ளிதெய்வ யானையையு...*
மாசையுடன் பூசைசெய்யு மன்பனும் - தேசளவக் (௨௭௫)

சோழிக் கொடியார்க்குக் கொற்றநண்பன் வெற்றிபெற்ற
மேழிவளர்கொடியும் வெண்கொடியுஞ் - சூழும்வெள்ளைக்

குஞ்சரமு மஞ்சமஞ்சக் கொட்டு மணிமுரசும்........*
பஞ்சசத்த வாத்தியமும் பட்டர்துதி - விஞ்சுஞ்....(௨௭௭)

சுவளைவளர் தோரணம்வெண் சாய்மனையுஞ் செப்ப .*
குவளை மலர்த்தாருங் கோலத் - தவளநிழல்.... (௨௭௮)

வீசுபரி வட்டமுடன் வெண்குடையுந் தக்கதெனப்... *
பேசும் விருதான் பிரபலவான் - தேச்சார்ந்த......(௨௭௯)

பூமி புதல்வனணி பூபாலன் பூவசியன்..............*
காமருவு கங்கைகுலன் காராளன் - மாமருவிச்... (௨௮௦)

சீர்குதிகொள் வேளாளன் சைவ சிகாமணியிப் .........*
பார்துதிக்க வோங்கிவளர் பாக்கியவான் - ஏர்மிகுத்த ...*

செலுவ்வு பொய்கைகளுஞ் சேணளவு சோலையுஞ்சூழ் ..*
வேலைநகர் வந்த விமலனும்-மாலனையான் .... (௨௮௨)

முத்தையவே யீன்ற முதல்வ ரிருமூவர்...... ........*
சத்தியந் தப்பாத் தருமத்தோர்-வெற்றி......... (௨௮௩)

வயித்திய லிங்கமால் வையா புரிவே ............... *
தியர்க்கருள்ச தாசிவவேள் சேரு-முயர்ச்சியுள்ள (௨௮௪)

பச்சையப்ப தீரஸ்மிகு பண்பனரு ணசலமு ....... *
மெய்ச்சுமிரா மஸ்வாமி வீர னுமாம்-எச்சத் ... (௨௮௫)

திவர்க ளறுவர்களு மெண்டிசைகொண் டாடத் ...... *
தவறின்றி வாழ்ந்த சதுரர்-கவிஞர்களுக் ...... (௨௮௬)

கேர்த்த வயித்தியலிங் கேந்திர னுக் கிப்புவியில் ...... *
யாத்திரைசெய் வோர்மே லருள்புரியத்-தோற்றி (௨௮௭)

திருக்காஞ்சி பூதூர் திருவல்லிக் கேணி.......... *
திருப்புக் குருதிழிவேற் காடு-திருவூர்............(௨௮௮)

அருண கிரிபழனி யானைக்கா ராமே .................*
சுரஞ்சிதம்ப ரம்மதுரை தோணி-விரிஞ்சை ..... (௨௮௯)

திருநா ரணவூர்மேல் சீரங்கர் வாசந் ..................*
திருமலை காளத்தி க்ஷேத்ரந் -திருத்தணிகை .... (௨௯௰)

தெய்வத் திருவளூர் சேர்மயிலை சென்னைமுதல்.........*
மையற்ற கீர்த்தி மதிட்புரிகட்-கெய்துமவர்..... (௨௯௧)

தங்குதற்குப் பொங்கமுள சத்திரமும் பூங்காவு .......... *
மங்குறவழ் சோலைகளும் மற்றுமொரு-சிங்கார-(௨௯௨)

ஆருந் திருக்குளமு முண்டுசெய்ய வென்றுகொண்டு ... *
பாரி லதற்கிசைந்த வாங்கறிந்து-நேராக ........(உகூரு)

ராணிப்பேட் டைக்கும்வா லாசாப்பேட் டைக்குநடு . *
வாணித் திறமாய்ப்பா லாற்றருகில்-வேணபடி...(உகூச)

மேற்சொன்ன யாவும் விதித்து விதிமுறையா ....... *
யாச்சுதென்ற போதே யகமகிழ்ந்து-பூச்சியரா ம்(உகூடு)

வேதியனைக்கொண்டங்கே வேள்வியொன்றுமுற்றுவித்து
ஆதிமறை யோதுவிக்கு மந்தணனைச்-சோதித்...(உகூசா)

திருத்தியந்த சத்திரத்தி லெப்போதும் பார்ப்பார்க் . . *
கருத்தியுட னுண்டி யருத்தி-தரிப்பதற்கு .. .. (உகூஎ)

வத்திரமும் புத்தகமும் வாங்கி யளித்துமறை ....... *
வித்தையெல்லாங் கற்பிக்க மித்திரனை-யெத்தனத்தோ.*

டங்கிட் டவருக் களியாலே சம்பளங்கள் .............. *
பங்கிட்டு வைத்த படியவரால்-துங்கமறை..... (உகூகூ)

யோதியபே ரொத்தனையோ வோதுமவ ராயிரம்பேர் . *
காதையல்ல நான்கண்ணுற் கண்டுவந்தேன்-ஆதலினு..*

விப்பெரிய நற்கரும மியாவர்புரிந் தாரவர்த........*
மெய்ப்புதல்வரொங்கெனவிசாரிக்கச்-சொர்புலவீர் (ரூாக

மானவனிவ் வைத்யலிங்க வள்ள லுக்கோர் தெள்ளுமணி*
யானதனுக் கோடிமக னுமெனலும்-நானவனைப் (ரூாஉ)

பார்த்து மகிழ்ந்து பரிசுபெற வேணுமென்றே ... ....*
யார்த்த மனதி லருத்தியுற்றேன்-சீர்த்திதிகழ்.... (ரூாரு)

வல்லாரி மாநகரில் வாழ்ந்திருப்பா னென்றறிந்தோ...*
னொல்லாருஞ் சொல்ல விசைந்துடனே-சொல்லார்ந்த .*

மாமலைக ளாதிகண வாயும் பெருவனமு...............*
நாம நதிதாண்டி நாடுங்கால் -காமர்புனல் ......(௫௱௫)

பாய்ந்து பயிர்வளர்க்கும் பல்லாரி நாடுவள..... [ய்யில்
மேய்ந்திருக்கக் கண்டேநா னின்புழுற்றேன்-வாய்ந்தசெ

செந்தா மரைநீலஞ் செங்கழுநீர் செங்குமுதம்..........*
நந்தாத வெண்குமுத நாண்மலரு-விந்தையாய்ப்(௫௱௭)

பூத்து நிறைந்திருக்கும் பூங்கமலத் தண்பொகுட்டி...*
லார்த்தசிறுசங்கூர்ந்தமர்ந்திருப்ப-பார்த்தயனு(௫௱௮

ரன்னப் பெடைதா னளித்தமுட்டை யீதெனவே... *
துன்னியடைகாத்திடவுஞ் சூழ்ந்திறைப்ப-மன்னுமந்(௫௱௯

சங்கங் குமுகுமென்று தாமலறக் கேட்டவன்ன...*
மங்க நடுங்கி யருஞ்சிறையை யெங்கும்.............(௫௱௰)

விரித்தெழும்பும் போதினிலே மெய்வளி வீச ........*
பருத்ததே மாங்கனிகள் பக்க-வருக்கையினைச்...(௫௱௰)

சாடப் பலாக்கனியுந் தாழுஞ்செவ் வாழைபின்மேற்..*
கூடவந்து வீழ்ந்து குலைசாய்ப்ப நாடெல்லாம்(௫௱௰௨

முப்பழத்தின் சாறு மொழுங்குமந்த சோணாட்டை......*
யொப்பவிதுமேனுடேயொக்குமே-தப்பில்லையே(௫௱௰௫

சொன்னெற் பயிரொல்லாஞ் சோளப் பயிராமச் [ன்னல்
சொன்னற்பயிரில்சொன்னற்தோன்றுமே-சொன்னசொ

கன்னலாங் கன்னல் கமுகாங் கமுகமரந்............... *
தென்ன மரம்போற் செழிக்குமே-தென்னமரம் (௯௱௰௫

வானோங்கி நீண்டு வளரு மிளநீரை....................... *
வானவரு மாந்தி விடாய்தீர்வார்-தேனளவிப்...(௯௱௰௬)

பாயுஞ் செழுமையினார் பல்பூ மரங்களெல்லா ....... *
மேயும் படிவான மெட்டிநிற்கும்-தூயநிறப்...(௯௱௰௭

பூந்தளிர்கள் விண்ணுலவும் பூக்களெல்லா மண்ணுலவும் *
பாய்ந்திருக்கும் வேராலே பாதலமும் வாய்ந்திருக்கும் *

மூவுலக மெங்கு முருகு பரிமளிக்கும்.................. *
காவுகளுஞ் சூழ்ந்திருக்கக் கண்டேனே-தேவர்புக (௰௯)

நம்பவிருப் பாக்ஷிச் சடுத்ததல மாதலினா ........... *
விம்பருல கத்திலிதற் கீடிலையே-சம்ப்ரமமாம்... (௯௨௰)

வல்லாரி யந்த வலாரி நகரொணலாஞ் .................. *
செல்லார்ந்து மும்பர் திசழ்மலையால்-வில்லார்ந்த (௯௨௧)

பேரா மணியிற் பிறங்கு மணிபோல.................. *
வேரா ரெயிலி னிலங்குமணி-தாரணிவெண் ......(௯௨௨)

சோதிசெறி கோபுரமே துப்பவெள்ளி மாமலையென் *
மேருதலா மாவணத்தி னுப்பரிகை-தீதில்மலைச்...(௯௭௩)

சாரலிலே வானவர்கோன் றந்தி யினத்துடனே ........ *
சேரவந்து நின்ற செயல்போலுஞ்-சீரிதாம்.....(௯௨௪)

வெண்ணிலவு வீசும் விநோதத்தைப் பார்க்கவென்று... *
வண்ணமுயர் நேராம வழிகொண்டேன்-விண்ணளவுஞ் *

சாலையெலா மீனவன்றன் றண்மலைப் பாசறைபோன் *
மாலுகமு மாலும் வளர்ந்துநிற்கச்-சாலவுவந் ...(௯௨௯)

தாவணத்திற் சென்றே னணியணிக ளாய்நிரைத்த ......*
காவளமும் பூவளமுங் கண்டுகொண்டே-மாவளமாஞ் *

சோலை நடைவாவிச் சுற்றுப் படித்துறைய ............ *
மாடமுஞ் சூழும்பொன் னார்மதிலும்-னம்பலவும் ...*

நன்மறைக ளோதுகின்ற நான்மறையோர் வாடைகளுங்
கன்மலையுந் தேர்களொடுங் கண்ணுற்றேன்-வின்மலியுங் *

க்ஷத்திரியர் வீதிகளுந் தார்வணிகர் மூவலகியோ.........*
ருற்றதெரு வுஞ்சூத்ர ரொண்மறுகு-நத்தி........(௯௯௰)

நடைகாட்டி யன்னமயில் நாசரிகங் காட்டி ............*
யிடைகாட்டிப்பொற்கையெழில்காட்டி தொடைகாட்டிச்

சேலையுங் காட்டிச் செழுந்தனமுங் காட்டிப்பொன்...*
மாலையுங் காட்டி மகிழ்காட்டி-வேலையெழும் .... (௯௯௨)

பன்முத்த முங்காட்டிப் பார்வைக் கடைகாட்டி ...... *
யின்முற்றங் காட்டி யிதழ்காட்டி-சொன்முத்தி...(௯௯௩)

வீதியிற் றம்பண்டம் விற்பார்போல் விற்றபொருள் ...*
பாதியுந் தாமே பயன்றுய்த்தும்-பேதமறக்......(௯௯௪)

கொண்ட பொருளைக் கொடாமலே வைத்திருந்தப் ...*
பண்டத்தை யேபின் பரிந்துவிற்று-மண்டி ......(௯௯௫)

யிருக்குமந்த வேசையர்க ளின்பமொழி வைகுந் ......*
தெருக்களுங்கண் டப்பாற் செறிந்து-நெருக்சமுள்ள .*

சாலேக் கணித்தாகத் தாமலாயா ரோரிபொன்று.........*
வேலேபோற் காண மிகமகிழ்ந்தேன்-வேலேபுடை (௫௫௭)

கொண்டிருக்குஞ் சேனே குடியிருக்கும் பாளேயமுங்...*
கண்டதற்கு மேலாகக் கண்ணுற்றேன்-அண்டையிலே-*

பச்சை நிறத்த பருப்பதத்தைப் போலொளிரு.........*
முச்சிதமா மேடையொன்று ஒகோகோ-மெய்ச்சுகின்ற.

சந்த்ரப் பிறைகவிழ்ந்து தானிருப்பப் போல்நுழையும்.
அந்தமுதல் வாயி லதுவழியால்-முந்தியே ...... (௫௪௰)

ஆசார வாச லதையுங் கடக்கவங்கே......................*
தேசதே சத்தார் செறிந்திருந்தார்-வாசமுள்ள ...(௫௪௧)

சந்தனத் தூண்கள் தரமுயர்ந்த போதிகையும்........*
பந்தியந்தி யாய்நிறுத்திப் பண்பாக-அந்தமர...(௫௪௨)

வுத்திரங்கள் பார்ச்சிமே லொண்பலகை யும்பரப்பி ...*
பத்திரமாச் செய்தருகில் டங்காளா-பெற்றவிது (௫௪௩)

தேவேந்த்ரன் வீடன்று செப்பகுபே ரன்மனேயன் ...*
யாவருநூற வீடோ வெனவினவக்-காவலர்யாம் (௫௪௪)

போற்றுந் தனுக்கோடி பூபன்மனே காணென்றார்......*
ஏற்றவந்த முத்தமிழோன் யானென்றே-சாற்றி .. (௫௪௫)

மணிக்கூடந் தன்னிலே வந்தே னவிடத் ...............*
தணிக்கோ டிடாச்சே வகர்கள்-கணக்கிலேயே......(௫௪௬)

வச்சிரமுத் திப்பவள மாணிக்கம் பச்சையுடன்.........*
மெய்ச்சுவயி டூரியங்கோ மேதகமு-முச்சிதமாஞ் (௫௪௭)

சாலுைவகள் பட்டு சகலாத்து நற்சரிகைச் ... ........ ❋
சேலை சவுளிதந்த செட்டிகள்பாற்-சீலக் ......... (௫௪௮)

கணக்கர் முசக்தி கணக்குகளை யாராய்ந் ......... ......❋
திணைகிவிலை தீர்த்தங் கெழுதிப்-பணத்தையெண்ணி...❋

தந்தமது கைச்சீட்டு தந்தபின்னர் தந்தார்நான் ...... ❋
விந்தைபங்க ளாவருகில் மேவினேன்-தந்ததிரா (௫௫௦)

வாசற் படிக்கதவும் வன்சா ரளக்கதவுந் ............... ❋
தேசுப் பளிங்கதனாற் செய்தவோ-காசிலொளி ...(௫௫௧)

விஞ்சுபச்சை வால்ஷேட்டும் வெள்ளைவால் ஷேட்டுஞ் ❋
மஞ்சள்வால் ஷேட்டுகளு மாகத்தில்-சஞ்சரிக்கு...(௫௫௨)

மாவலனுஞ் சந்திரனும் வானவர்த மந்திரியும் ......... ❋
போல நனிவிளங்கப் பூட்டியதே-மேலுயரத் ... (௫௫௩)

தூக்கிட்ட லஸ்டரொடு தொங்குங் குளோப்புகளு......❋
நீக்கமில்லா மீனினங்க ணேர்சொலினு-மேர்க்கும் (௫௫௪

இரத்தின காந்தி யிதுவென்னக் காட்ட...............❋
விரத்தினக் கம்பளி யெங்கும்-விரித்தணிகொள் (௫௫௫)

மேசைப் பலகை விதவிதமாய்ப் போட்டவைமேல் ...❋
தேசப் படமைபல சேர்த்திருக்கும்-வேசைடர்போ...❋

லாடும் பதுமைகளும் யாழெடுத்த காயகர்போற்....❋
பாடும் பதுமைகளும் பார்க்கவந்து-கூடிநிற்குஞ் (௫௫௭)

சேவகரு மாவணருஞ் சிப்பாய்க ளுந்துலைகள்......❋
மாவலிய பொட்ளேர்து வாசிகள்போன்-மேவிநிற்கும்.❋

னீறுப் பதுமைகளிற் சித்திரவிச் சித்திரமா ............. *
மாறுருஞ் சேடியரு மானுமே-காணவரு ...... (ருநுக)

மூலையிலா மேசைபக்கல் மூந்துறை சானிதுறை ... *
போவச சிலபதுமை பொற்பளிக்கும்-சாலமிசை (ருகூய)

வீசுபங் காவசந்தன் மெய்குளிர வீசிநிற்கும் ......... *
பூசசந்த வட்டிலும்பன் னீர்ச்செம்பும்-மாசிலாச் (ருசூக)

சந்திரனை நிந்திக்குந் தண்பளிங்கிற் செய்தவவை ...... *
யெந்ததே சத்தவோ வென்னவிலை-தந்தவோ... (ருசூஉ)

அந்தசந்திர காந்திமணி யாற்செய்த பாக்குத்தட் ....... *
டிந்தவுல கோர்செய்த வேனமல்ல-மூந்தவவை...(ருசூரு)

கண்டாற் பரிமளிக்குங் கைதொட்டா லீர்சுரக்கும் ... *
வெண்டா மரையாள் விரும்புமே-பண்டிதர்போல் ...*

நாழிகைவி நாடிகளு நன்றாகக் காட்டுகின்ற .......... *
ஆழிக் கடார மொளிரநிற்கும்-வாழ்சீனக் ...... (ருசூறு)

கண்ணாடி சீமைக்கண் ணாடிவழி கண்ணுற்றால் ......... *
மண்ணுடலந் தோன்று மன்னியந்து-முன்னின்றார் *

தம்மையே காட்டித் தமதுநிலை காட்டாத ............ *
செம்மையார் வேசநிகர் செப்பலா-மம்மவோ (ருசூள)

எத்தனைவி தத்தவவை யெத்தனையே ருத்தவவை ...... *
யெத்தனையு யர்ச்சிவிலை பெற்றவெனபேன்-சுற்றிவரத் *

தங்கத்தின் சட்டத்த தவெள்ளிச் சட்டத்த ......... *
பொந்துமூலாம் பூசிப் பொருத்தியவால் இங்கிதமாம். *

நாட்டுப் படங்கள்சீ னப்படங்க ளிங்கிலீஷ்..........*
நாட்டுப் படங்களுபலீ லைட்படங்கள்-தேட்டாளன் ...*

எங்குதந்து சேர்த்தானோ யாவர்கண் டாலுமவை ......*
தங்கள்கண் ணவைவாத் தாம்பார்க்கும்-பொங்கிவழி (௭௧

புன்சிரிப்பைக் காட்டுவன பொற்கைபி னீட்டுவன ...*
மஞ்சரியு மொஞ்சரிப்பு மல்லாப்புங்-கெஞ்சுங்...(௫௭௨)

குழந்தை யெடுப்பனவுங் கூடப் படுத்தே ............*
யெழுந்திருத்தல் போற்றீட்டி கிற்பார்-தொழுந்தகைய *

பற்பலகண் ணடிப் படங்க ளிடநிறைய ...............*
வற்புதமார் நாற்சுவரு மார்ந் துநிற்கும்-ஒப்பில்லா(௫௭௪)

நாலு விசிப்பலகை நாற்காலி கட்டில்மெத்தை..........*
சிலுப்பட் டுக்கவசஞ் சேர்த்தனவாம்-காலூர்ந்த...(௫௭௫)

பூமாலை புப்பரிகை பொற்பிணைக்கண் டாலெவரு ......*
மாமாலைக் கொண்டு மயங்கிநிற்பார்-பூமாலைச்...(௫௭௬)

சீதாபி ராட்டிமணஞ் செய்தநாள் செய்தவொரு ...*
தாதாரும் பந்தனத் தக்கததில்-நீதி...........(௫௭௭)

பருபா மறையே பருவா கிபசீர்...........................*
விரதா திகளின் விதியே-யுணாசெய்........ ... (௫௭௮)

மறையோ ரொருபால் மதியால் பலநூ ...............*
னிறைசீர் பிரயோ சனநேர்-நெறிதர...........(௫௭௯)

வோதிய பாவலர் மாதுல ரோர்திரள் .................*
சோதரர் தூயவ ராதியர்-ஞாதியர்...............(௫௮௰)

உற்ற குலத்தொரு மித்தவர் மெய்த்தவர் ................*
மித்திரர் மொய்த்திட வித்தகர்-மத்தியிலே...... (ருஅக)

கீர்த்தி பெறுகையன் சிங்கார மாமெய்யன் .............*
வீற்றிருக்க வுட்செறியும் வேளையை நான்-பார்த்திருப்ப*

சிங்கள ரங்கர்க லிங்க ரவந்தியர்.........................*
கொங்கணர் வங்களர் குந்தளரர்-தெங்கணர் ..... (ருஅங)

சாளவர் கேகையர் கேரளர் கோசலர் ....................*
மாளவர் லாடர்ம ராடர்நே-பாளர்கள்.............(ருஅச)

சீனர்கி ராடர்கள் ஞடர்கள் கோசிகர் ....................*
சோனக சேசுர சேனர்க-ளேனைக்............... (ருஅரு)

குடகர் மகதர் குகுதர் சகர்கள் ..........................*
ஙடர்யவ் வனரோ யருணர் நிடதர்கள்.............(ருஅசா)

இந்தர் புளிந்தர்வி தர்ப்பர் செறிந்தயு ................*
கந்தர்கு ளிந்தர்கள் பப்பரர்-கொந்தலர்... .....(ருஅஎ)

காந்தாரர் பாஞ்சாலர் காம்போச ராந்த்ராதி ..........*
வேந்தாதி பன்னரர்க்கு வேந்தனுஞ்-சாந்தகுணன் ...*

தேசமெங்கு மோங்கிச் சிறந்த நரபதியென் .........*
றேசைபெற்ற சந்திரகு லோத்துங்கன்-வாசவனோர் ...*

ஆனைகுந்தி தேசத் தரசாக்ஷி செய்கின்ற ..................*
தேனகுந்தோண் மாலைச் செகவீரக்-கோனுந் ... (ருகூய)

திருமலை தேவரா சேந்திரன்றன் சேனை ..................*
யிருபுறமு மொய்க்க விளைக-வரியசைப்ப.....(ருகூக

பட்டோர சாக்கள் பணிந்துபுக ழேற்றெடுப்ப ......... *
வெட்டுதிக்கு மெட்டு மியந்துவைப்பச்-சட்டவட்டத் *

தைந் துகதி திந்திமிதெய் தொந்தமென வந்தரமு ....*
மிந்திரலோ கஞ்செறியென்ன மந்தரமு-முந்திதனை (௫௰௩)

வந்து நடனவி தங்கள் வகைவகை ................*
மந்த கமன் மதங்கியரும்-பிந்த ..............(௫௰௪)

நடித்துதத்தித் தாவெனர கைத்துதத்தித் தாவ........*
நடக்கும் பரியிழிந்து நாலாம்-படைக்கரசன் ... (௫௰௫)

தானுந் தளவாயுந் தலைவாயி லுட்புகவம்............. *
மானபுரன் வந்து மனமகிழ்ந்து-தேனின் .... (௫௰௬)

கனியு முகமன் கழறிக்கை தந்தே .................... *
யினிதுகொண் டாடும்போ தென்னைப்-புனிதனவன்...*

பண்டு பழகியபோற் பார்த்துமிகத் தோத்திரஞ்செய் *
தண்டையிலே வந்தவ் வரசனுடன்-கொண்டுடகி (௫௰௮)

யுப்பரிகை வாயிலுக் குட்சென்று நற்றவிசில்......... *
பொற்புடனே யிருக்கப் போற்றினன்-அப்படியே (௫௰௯

சத்திரனு மிந்திரனுந் தாழாப் புலவருமம் ........... *
மந்திரியும் வந்தமன்னவ் வள்ளலுஞ்சூழ்-முந்துகவி (௬௰)

வாணருந் தந்திரியு மாக வளம்பொலிந்து .......... *
காணும் படியிருக்குங் காலத்தில்-சேணி ........ (௬௰௧)

னுருப்பசியை யேய்க்கு முருப்பசிய பொன்போ ...*
லிருக்குமொரு சுந்தரியு மேந்துந்-திருக்குலவு .(௬௰௨)

மேனகையுநாண வொளிர்மேனகைபூண்டா ளொருபெண்
ணனக் குழலி நலவரம்பை-தானென் ............ (சா௪)

னரம்பை யுறங்கு மழகாங் குறங்கி ..................... *
யொருங்கு மணியணிந்தா ளோர்பெண-சுரும்புமிசை *

சென்றாட வாடுந் திலோத்தமியை யோட்டவெட்பூ ... *
நின்றாடு மூத்துதிகர் நாசியாள்-கண்டாங்கும் ... (சா௫)

காரிகையா ரிந்நால்வர் காமப் பயிர்போல்வார் ........ *
சேரவந்து முன்னின்று சேவித்து-நேரே .... (சா௬)

பாதநூல் பாங்குபெறப் பாரின்மத னூட்டுங் ........ *
சாதநூ லோங்கிச் சுரக்க-உரைமிகுத்த ......... (சா௭)

வண்ண வழிநாட்டுந் தன்னுமையு மெண்ணரிய ..... *
பண்ணினைக் காட்டிப் பகர்தாளம்-பண்ணும் ... (சா௮)

நரம்புஞ் சுரும்பேர்க்கும் நாரியோர் பாடல் ......... *
நிரம்பியொரு பாங்காக நேரப்-புனைநீர் ........ (சா௯)

சுதியடுப்பச் சத்த சதிமிதிப்பச் சூழ்ந்த ............ *
பதவிதஞ்ச தங்கைகொஞ்சிப் பாட-மதனுவப்ப. (சா௰)

அன்ன ரதியு மதிசயிப்ப மின்னேங்க ................. *
மின்னா ரபிநயித்த விந்தையைச்-சொன்னால் . (சா௰௧)

நடனத்தைத் தந்தவந்த நல்லோனே யல்லால் ......... *
திடனுற்றுச் சொல்வாரார் தேனா-உடனெக்க ... (சா௰௨)

வந்த பரிசனமும் வாட்டடங்கட் கூட்டமுமவ் ....... *
விசித்திரன்கண் காக்ஷி யெனக்கண்டோம் சுந்தரனவ் .... *

சாற்பிரபந்தம். 

வீரன் விரைச்சாந் தும் வெண்மல் லிகைச்செண் டுந்... *
தாருந் துராய்ப்பன்னீர் சந்தனமெப் புஞ்-சேரப்.. (௪௰௫)

பிளவுசா திக்காயப் பேர்பத் திரியு...... ............... *
மிலவங்க மேல மிளவெள் -ளிலையிலிட்டுச்........(௪௰௬)

சுற்றி மடித்த சுருளும் வரன்முறையே ............... *
யுய்த் தளிக்கச் செய்தா னுவந் துகொண் டோம்-மற்றை *

மனுக்கோடி யானாலும் வையத் தொருவர்............ *
தனுகோட்டிக் கார்நேராச் சார்வார்-தனுக்கோடிச் *

செங்கண்மா லாமவன்மேல் செந்தமிழ் தோன் றேதியதின்
மங்களமா திப்பொருத்த மவாசித்தேன்-அங்கவமனன் *

கையிலிட் டான்றோடா காதிற் கடுக்கனிட்டான் ...... *
றுப்பமுத்துக் கண்டிகளுஞ் சூட்டினன்-மெய்யுறவெண்.

சாலுவைகள் போர்த்தான் றகட்டுப்பா கையளித்தான் *
மேலுமிரு பொன்சரிகை வேட்டிதந்தா-னேனுமென *

வாயிரம்பொன் மூட்டைதந்தா னுமிந்தப் பாடலமேற்
போய்வாரு மென்றுநனி போற்றியே பாயிரம்போற். *

சொன்னு னுபசாரஞ் சொல்லி வழிவிட்டான்........ *
றன்னே ரிலாதகன்னன் றன்போல்வான்-மன்னுங் ... *

கவிவாணு நீயவன்மேற் கற்பனைநா லொன்று ...... *
புவியோர் மதிக்கப் புகன்றால்-அவனுன் ...... (௫௰௫)

மனக்கவலை மாற்றி வறுமைநோய் தீர்ப்பான்......... *
னினைக்குறுதி சொன்னே னிசத்தை-மனக்கொள்வாய் *

மிக்க கொடைகொடுக்கு மேன்மக்கள் பேரிலே........ *
தக்கபுகழ் பாடாச் சடக்கவியும்-பக்குவத்தைக்...(௪௨௫)

கண்டுசீ டர்க்குக் கருதியுப தேசத்தை .......... .... *
யண்ட வுணையாத வாசானுந் தொண்டா ........ (௪௨௬)

டலைந்து திரிந்து மலக்கழிவா ரொன்றே ............. *
யிலங்கநூல் சொல்வித் திலையோ புலவவென்றான் (௪௨௭)

அன்னையெங்கள் காமாக்ஷி யம்ப ளருள்சுரந்து........*
சொன்னதே யின்றுநாஞ் சொன்னதென-வுன்னி ௪௨௮

நடைநடந்து பொங்கு நதிகளுங்க டந்து........... *
புடைசெறிந்த கான்மலைகள் போக்கிக்-கடுகிபிந்த( ௪௨௯

நாட்டுள்வந்தே னிவ்வூரி னண்ணியுன்றன் சொன்னமய *
வீட்டு நுழைந்தேன் விடாய்தீர்ந்தேன் எட்டாலும்.. *

ஆராலுஞ் சொல்லி யடங்கா துயர்ந்தென்றும் ......*
பேராத சீர்த்திமிகப் பெற்றோனே-சீராளா....(௪௩௧)

என்னையிந் நாள்வரையி லேங்குவித்த பாழ்ங்கலியென் *
றன்னைவிட்டுப் பின்னேகச் சாற்றுவாய்-மன்னவனே *

பேரால் பெருநிதிகு பேரா வணிகுவளைத் .......... *
தாரா தனுக்கோடித் தாருவெனும் பேராளா.. (௪௩௩)

நீபு நிறைந்த கலாநிதிநின் பாலடைத்தோர்க் ......*
கேபு நிறைந்தக லாநிதியே-தாயாய்...............(௪௩௪)

இரவலர்க்கும் பாவலர்க்கு மீகைபுரி கையால் ........*
புரவலர்கோ மான்மாலும் போல்வாய்-இரமா .. (௪௩௫)

மெழுதொணப் பேரா னிருக்குந் தருட்போல் ... ...*
விழுதுான் றிச சுற்றம் விளங்கித்-தழுவொணப்... (௪௰௬)

பெம்மானைத் தானீன்ற பேர்முங்கி லாமெனவுஞ் ......*
செம்மார்ந்து வெற்றி சிறந்தோங்கி-நம்மால் ... (௪௰௭)

களிற்று முகத்தான் களித்தபுற் போலத்.............. *
திளைத்து மலிகுலவேர் சேர்ந்தே-அளிக்குங் .... (௪௰௮)

கும்ப னருளாற் குமரரைப் பெற்று ................... *
தமர்கள் மசறிந்து தழைத்து-உமைபருளால் ... (௪௰௯)

நோய்நீங்கி வாழ்வாய் நுவலும் புவிச்செல்வந்......... *
தேயாது தேகந் திகழ்ந்து .......................... (சசய)

முற்றியது;

# அச்சுப்பிழைகளைத் திருத்துஞ் சட்டம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| க | உசு | ஆசிரிய, | ஆசரிய, |
| ;; | உஅ | வலலாரி, | வல்லாரி, |
| உ | ரு | லியற்றிவை, | லியற்றியவை, |
| ;; | யரு | தனுககோ, | தனுக்கோ, |
| ;; | உஅ | ணட, | ண்ட, |
| ;; | உகூ | வளர்ந்தி, | வளர்த்தி, |
| ரு | ரு | முந்நா, | மிந்நா, |
| ;; | யசா | சரிப்பா, | சரியப்பா, |
| சு | உரு | தெவ்வரு, | தெவ்வரு, |
| பக்கம் | பாட்டு. | பிழை. | திருத்தம். |
| அ | எகூ | தாவிலிய லோடிகை, | தாவிலியலொடிகை |
| யக | ளய | துப்ட்டா, | துப்பட்டா, |
| யச | ளசக | குணப்பா, | குறைப்பா, |
| யகூ | உளச | னளர்ந்து, | னளந்து, |
| உய | உளகூ | யிரனுவ, | யிரநாவ, |
| ;; | உளயக | மீர்வழியாய், | மீர்வழியாய்ப், |
| உஉ | உருசா | போட்டுப், | போடப், |
| உஎ | உஅஅ | குருதிழி, | குழிதிரு, |
| உகூ | ருளசு | சொல்லார்த்த, | செல்லார்ந்த, |
| ;; | ருளஎ | நாண்மலரு, | நாண்மலரும், |
| ருஉ | ருசுரு | யங்காளா, | யங்களா, |
| ருரு | ருருக | வன்சாரள, | வன்சாளர, |
| ;; | ருருஉ | ஷேஷிட்டுஞ், | ஷேஷிட்களு, |
| ;; | ருருரு | மாவல, | மாலவ, |
| ருசு | ருசாஅ | யெத்தனைபே, | யெத்தனையெ; |
| ருசா | ருஅஎ | கித்தர், | சித்தர்; |
| சுய | சுருசு | பாலடைத், | பாலடைந்; |